பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 17 வெள்ளிக்கிழமை 02.09.2022 கதிர் 188


## குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை!



அம்பாந்தோட்டை, மித்தெனிய சதோஸ்மாதகம பிரதேசத்தில் இனந் தெரியாத நபர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் 47 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் பலியானார். ☞2

### ஐ.நாவில் தமிழருக்கு நீதி வேண்டி

# எந்தப் பிரேரணை வந்தாலும் முழுமையாக வரவேற்போம்!



### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகப் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி முன்வைக்கப்படவுள்ள புதிய பிரேரணையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது. ☞2

### அன்று ஆங்கிலத்தில்; இன்று சிங்களத்தில்

## ரணிலின் கையெழுத்து மாற்றத்தால் அவரின் நிலைப்பாடுகளிலும் மாற்றம்



### சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

இதுவரை காலமும் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது சிங்களத்தில் கையெழுத்திடுவதன் மூலம் அவரின் நிலைப்பாடுகளும் மாறி வருவது தெளிவாகின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ் சாட்டினார். ☞2

## வாக்கெடுப்பைப் புறக்கணிக்க சஜித், டலஸ் அணிகள் தீர்மானம்



நாடாளுமன்றத்தில் இன்று மாலை நடைபெறவுள்ள இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாதிருக்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. ☞2

## ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்



புத்தளம் வைத்திய சாலையில் தாய் ஒருவருக்கு ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறந்துள்ளன.

24 வயதுடைய இளம் தாய் ஒருவரே இந்தக் குழந் தைகளைப் பெற்றெடுத்தார் ☞2

## எந்த நாட்டையும் நாங்கள் பகைக்க விரும்பவில்லை

### ஜெனிவா விவகாரம் தொடர்பில் ரணில் கருத்து

இலங்கை இறையாண்மை கொண்ட நாடு. எந்த நாடுகளுடனும் நாம் பகைக்கவும் விரும்பவில்லை. ஒரு நாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து நாம் நடக்கவும் விரும்பவில்லை. அனைத்துநாடுகளையும் அரவணைத்துப் பயணிக்கவே விரும்புகின்றோம். ஜெனிவா விவகாரத்தில் இதுவே எமது நிலைப்பாடு.

-இவ்வாறு ஜனாதிபதி ☞2

## பஸில் வெளிநாடு செல்ல உயர்நீதிமன்றம் அனுமதி



இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்புக்கூறும் வழக்கில் சிக் கியுள்ள முன்னாள் நிதி அமைச் சர் பஸில் ராஜபக்ஷவுக்கு வெளிநாடு செல்ல உயர்நீதிமன் றம் அனுமதி வழங்கியுள் ளது.

எதிர்வரும் 2023ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் வெளிநாடு சென்று வர உயர்நீதிமன்றம் இன்று அனுமதி வழங்கியுள்ளது.

## மீண்டும் குறைகின்றது லிட்ரோ எரிவாயு விலை

எதிர்வரும் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய விலைகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அடக்குமுறைகள் அடங்கும் வரை நாட்டுக்கு டொலர் அனுப்பாதீர்கள்

### புலம்பெயர் மக்களிடம் பொன்சேகா கோரிக்கை

அரச பயங்கரவாதம் செயற்படும் நாடான இலங் கைக்கு பணம் அனுப்புவதைத் தவிர்க்குமாறு வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களிடம் கோரிக்கை விடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். அரசின் அடக்குமுறைகள் ☞2

## இரும்புக் கம்பியால் தந்தையைத் தாக்கி கொலைசெய்த மகன்

இரத்மலானை பிரதேசத்தில் தந்தையை இரும்புக் கம்பியால் கொடூரமாகத் தாக்கி மகன் படுகொலை செய்துள்ளார்.

தாய் மற்றும் தந்தையுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக சந்தேகநபரான மகன் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

70 வயதுடைய தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் தாயும் படுகாயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் ☞2

## போராட்டங்கள் காலிமுகத்திடலில்தான் இல்லை; மக்களின் மனங்களில் நெருப்பைப் போல் உண்டு



### எதிர்காலத்தில் வெளிப்படும் என்று பொன்சேகா எச்சரிக்கை

போராட்டங்கள் வெளியில் தெரியாவிட்டாலும் நீறுபூத்த நெருப்பைப் போன்று இருக்கின்றது என்றும், எதிர்காலத்தில் மீண்டும் வெளியில் தெரியும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் மக்களால் வாழ முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இரும்புக் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேர்க்கப்பட்டுள்ளார். உயிரிழந்த தந்தை சுமார் இரண்டு வருடங்களாக சுய நினைவின்றி இருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரான மகன் கல்கிசைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## அன்று ஆங்கிலத் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாவது நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவிக்கையில்,

எனக்கு முன்னதாகப் பேசிய அமைச்சர் (மஹிந்த அமரவீர) யாழ்ப்பாணம் பிரதேசத்திலே வெங்காய உற்பத்தியைப் பற்றிச் சொன்னார், மண்ணெண்ணெய் அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று பேசினார். ஆனால், இன்றைக்கு இரண்டு மாதங்களுக்கு மேலாக மண்ணெண்ணெய் இல்லாமல் அவர்கள் அவஸ்தைப்படுகின்றார்கள்.

விவசாயிகள் நீர் இறைக்கின்ற இயந்திரத்துக்கு மண்ணெண்ணெய் இல்லாமல் அவஸ்தைப்படுகின்றார்கள். மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு தமது படகு இயந்திரங்களுக்கு மண்ணெண்ணெய் இல்லாமல் அவஸ்தைப்படுகின்றார்கள். இந்த விடயத்தை எவ்வளவு தடவைகள் எடுத்துக் கூறியும் அதற்கு எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை.

கிடைத்த ஒரேயொரு பதில், 87 ரூபாவாக இருந்த மண்ணெண்ணெய் 340 ரூபாவாக அதாவது 253 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதாக வந்த அறிவிப்பு. அறிவிப்பு மட்டும்தான், மண்ணெண்ணெய் வரவில்லை. மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு அறிவிப்புதான் வந்துள்ளது. ஆனால் மண்ணெண்ணெய் வரவில்லை.

முன்பதாக மீன்பிடி அமைச்சர் (டக்ளஸ் தேவானந்தா) பேசினார். பானையில் இருக்கின்ற நண்டுகள் பற்றியெல்லாம் பேசினார். அவர் ஏதோ ஒரு உலகத்திலே இருக்கின்றார். கொதிக்கின்ற பானையில் நண்டு விழுந்து சாகுதாம், வெளியால் பாய்ந்து சாகுதாம் என்று தன்னுடைய நிலையைப் பற்றி உருக்கமாகப் பேசிவிட்டு சென்றிருக்கின்றார்.

ஆனால், கஷ்டப்படுகின்ற விவசாயிக்கும், கடற்றொழிலாளிக்கும் எந்த நிவாரணமும் கொடுக்கப்படவில்லை.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் கூட, இந்த இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் கூட ஒரு முன்மொழிவு இருக்கின்றது, மண்ணெண்ணெய் பாவிப்பவர்களுக்கு நிவாரணம் கொடுப்பதாக ஒரு முன்மொழிவு இருக்கின்றது. ஆனால், ஒதுக்கீட்டைப் பார்த்தால் ஒரு சதம் கூட அதற்கு ஒதுக்கப்படவில்லை.

அண்மைய நாட்களாகத் துப்பாக்கிச்சூட்டு மரணங்கள் அதிகரித்துள்ளன. அந்த மரணங்களைத் தடுக்கவோ சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யவோ பொலிஸார் பயன்படுத்தப்படவில்லை.

ஆனால், மக்களின், மாணவர்களின் போராட்டங்களை அடக்கவே பொலிஸார் பயன்படுத்தப்படுகின்றனர். ஓர் இடத்தில் 500 பேர் ஆர்ப்பாட்டம் செய்தால் அங்கு ஆயிரம் பொலிஸார் நிற்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க வழக்கமாக ஆங்கிலத்தில்தான் கையெழுத்திடுவார். ஆனால், அவர் ஜனாதிபதியானதன் பின்னர் மூன்று தடுப்புக் காவல் சட்ட ஆவணங்களிலும் சிங்களத்தில்தான் கையெழுத்திட்டுள்ளார். இதன் மூலம் அவரின் மன நிலை மாறி வருவதைக் காண முடிகின்றது - என்றார்.

## வாக்கெடுப்பை...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துடன், சிறிலங்கா பொதுஜன முன்னணியில் இருந்து வெளியேறி எதிரணி வரிசையில் சுயாதீனக் குழுவாக இயங்கும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான 13 எம்.பிக்களும் வாக்கெடுப்பில் பங்கேற்காதிருக்கத் தீர்மானித்துள்ளனர்.

## போராட்டங்கள் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உணவு, மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது. போசனை குறைபாடு உள்ள நாடுகளில் இலங்கை 6 ஆம் இடத்துக்கு வந்துள்ளது.

அத்துடன் இப்போது நீர்க் கட்டணம் அதிகரித்துள்ளதால் மக்கள் குளிக்கக் முடியாது வாவிகளில் பாய்ந்து நீந்த வேண்டியும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, பொருளாதார நெருக்கடிகளால் பல்வேறு பிரதான நிறுவனங்கள் ஆயிரக்கணக்கான ஊழியர்களை வேலையில் இருந்து நீக்கவும் திட்டமிட்டு வருகின்றன. மின்சாரக் கட்டண அதிகரிப்பு மற்றும் எரிபொருள் விலையேற்றங்களாலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பல்வேறு விடயங்களில் ஊழல், மோசடிகள் நடக்கின்றன. இந்த அரசு அந்த எண்ணத்தில் இருந்து விடுபடப் போவதில்லை.

போராட்டம் எனும் போது ஜனாதிபதியை விரட்டுவது அல்ல. அதன் நோக்கம் ஊழல், மோசடி அரசியல்வாதிகளை விரட்ட வேண்டும். இவர்களை அதில் இருந்து நீக்க வேண்டும். இதுவே நடக்க வேண்டும்.

போராட்டங்கள் காலிமுகத்திடலில் தெரியாவிட்டாலும் மக்களின் மனங்களில் உள்ளது. பெரும்பான்மையான மக்களின் மனங்களில் உள்ளதுடன், மொட்டுக் கட்சியினரின் மனதில் இல்லாவிட்டாலும் வயிற்றிலும், சமையலறையிலும் உள்ளது.

இதனால் தாக்குதல் நடத்தி, ஒடுக்குமுறைகளை முன்னெடுத்துப் போராட்டங்களை நிறுத்த முடியாது.

போராட்டங்கள் சாம்பலுக்குள் உள்ள நெருப்பைப் போன்று எதிர்காலத்தில் வெளியில் வரும். அதற்குத் தேவையான பலத்தை நாங்கள் வழங்குவோம்.

போராட்டம் இன்றி வேறு எந்த முறையிலும் ஊழல் அரசியல்வாதிகளிடம் இருந்து நாட்டை மீட்க முடியாது. இதனால் போராட்டத்தைத் தொடர்ந்தும் கொண்டு செல்ல வேண்டும்.

போராட்டகாரர்களைக் கைது செய்கின்றனர். எமது பிள்ளைகளை நிச்சயமாக மீட்க வேண்டும். சட்டத்தரணிகள் இதற்காக இணைய வேண்டும். அதேபோன்று மக்களும் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.

## ஐ.நாவில்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார்.

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர் வில் இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணை நிறைவேற்றப்படவுள்ளது. பிரிட்டன் தலைமையில் இது முன்வைக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை விவகாரம் ஜெனிவாவில் இம்முறை எதிரொலிக்கும் என்பது ஏற்கனவே தெரிந்த விடயம். இறுதிப் போரில் நடந்த மன்னிக்க முடியாத சம்பவங்களுக்கு நீதியையும் பொறுப்புக்கூறலையும் வலியுறுத்திப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குச் சார்பாக எந்தப் பிரேரணை வந்தாலும் அதனை முழுமையாக வரவேற்போம். அந்தப் பிரேரணையின் பரிந்து ரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசுக்குத் தொடர்ந்து அழுத் தங்களையும் கொடுத்து வருவோம் - என்றார்.

## அடக்குமுறை...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடங்கும் வரை நாங்கள் பசியால் சாகத் தயாராக இருந்தாலும் ஐந்து சதமேனும் அனுப்ப வேண்டாம்.

இந்த அரசுக்கு உதவாதீர்கள். ஐ.எம்.எப். மூலம் என்ன கிடைக்கின்றதோ அதுவே கிடைக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## எந்த நாட்டை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணை முன்வைக்கப்படவுள்ளமை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் எந்த நாடும் எமக்கு இன்னமும் தெரியப்படுத்தவில்லை. இலங்கை மீது என்ன பிரேரணை வருகின்றது என்பதை அறிந்த பின்னர் தான் அது தொடர்பாக எமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணை நிறைவேற்றப்படவுள்ளது. பிரிட்டன் தலைமையில் இது முன்வைக்கப்படவுள்ளது. இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று ஜனாதிபதியிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய நிலைவரம், அதிலிருந்து மீண்டெழ நாம் எதிர்பார்க்கும் சர்வதேச ஒத்துழைப்புக்கள் - உதவிகள் தொடர்பில் மற்றும் இலங்கை மீதான கடந்த கால தீர்மானங்கள் தொடர்பில் ஜெனிவா அமர்வில் இலங்கை நிலைவரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது வெளிவிவகார அமைச்சர் அது தொடர்பில் தெரிவிப்பார் - என்றார்.

## ஒரே பிரசவத்தில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்று புத்தளம் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சுமித் அன்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர்களில் ஒரு ஆண் மற்றும் மூன்று பெண்கள் உள்ளனர்.

தற்போது, குறித்த நான்கு குழந்தைகளும் புத்தளம் வைத்தியசாலையின் சிறுவர் வைத்திய நிபுணர் வைத்தியர் சம்பின் ஜயவர்தனவின் மேற்பார்வையில் பாதுகாப்பாகச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## குடும்பஸ்தர் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த நபர் நேற்றிரவு உறவினர் வீட்டில் இருந்து தமது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் பலத்த காயமடைந்த அவர், தலாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் இதுவரை தெரியவில்லை.

நாட்டில் கடந்த சில மாதங்களாக தொடர்ந்தும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

கடந்த மே 31 ஆம் திகதி தொடக்கம் நாட்டின் பல பகுதிகளில் பதிவாகும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள், வெளிநாடுகளில் இருந்து நாட்டில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் தரப்பினரால் வழிநடத்தப்படுகின்றன என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மே 31ஆம் தொடக்கம் நேற்று வரை 30 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

076 443 8622






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலுக்கு உள்ள பிரச்சினைகள்

இன்று மாலை நடைபெறப் போகின்ற இடைக்கால வரவு – செலவுத் திட்ட வாக்கெடுப்பில் கலந்து கொள்வதில்லை எனப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும், அண்மையில் பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்து சுயாதீனமாகச் செயல்பட முடிவு எடுத்துள்ள டலஸ் – பீரிஸ் அணியும் தீர்மானித்துள்ளன.

ஆகவே பெரிய பிரச்சினைகள், சிக்கல்கள் எதுவும் இன்றியே இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தை ரணிலின் அரசு நிறைவேற்றி விடும் என்றே தோன்றுகின்றது. அது இன்று மாலையில் உறுதியாகியும் விடும்.

ஆனால் ரணில் – தினேஷ் குணவர்த்தன அரசுக்கு இதுவல்ல பிரச்சினை. இனித்தான் உண்மையான சிக்கல்களே உள்ளன.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வ கட்சி அரசுத் திட்டம் தள்ளாடுகின்றது. சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் டலஸ் – பீரிஸ் அணி எதுவும் அந்த சர்வ கட்சி அரசில் இணையப் போவதில்லை.

அப்படிப் பார்த்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியவற்றுடன் சேர்ந்து இப்போது குறைந்தது 75 எம்.பிக்கள் சர்வ கட்சி அரசில் இணையப் போவதில்லை என்பது தெளிவு.

அந்த வகையில் 75க்கும் குறையாது எம்.பிக்கள் இணையாத அரசை சர்வ கட்சி அரசு என்றோ, தேசிய அரசு என்றோ அழைப்பதில் அர்த்தமில்லை.

இந்தக் கணக்கீட்டின் அடிப்படையில்தான் சர்வ கட்சி அரசு அமைக்கும் முயற்சி 'அவுட்' என்று ஆளும் தரப்பின் இளம் ராஜபக்ஷவான நாமல் தெரிவித்து இருக்கின்றார்.

அவர் குறிப்பிடுகின்றமைப் போல முன்னர் எதிர்த் தரப்பில் இருந்தபடி சர்வ கட்சி அரசை வற்புறுத்தியோர் கூட இப்போது அதைக் கைவிட்டு விட்டனர் என்பது உண்மைதான். இந்தப் பின்புலத்தில் நாமல் ராஜபக்ஷ குறிப்பிடுகின்றமைப் போல ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமக்கு ஜனாதிபதித் தெரிவின்போது நாடாளுமன்றத்தில் ஆதரவு அளித்த 134 எம்.பிக்களின் ஒத்துழைப்புடன் பலமான அரசு ஒன்றை நிறுவிக் கொண்டு தமது அடுத்த நடவடிக்கைகளைப் பார்ப்பது நல்லதுதான்.

எனினும் சர்வ கட்சி அரசு ஸ்தாபிக்கும் தமது எண்ணத்தை – முயற்சியை – தொடர்ந்து தீவிரமாக முன்னெடுக்க முயல்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதற்கான வாய்ப்புகள் குறைவு என்பதால், தனிப்பட்ட ரீதியில் எதிர்க்கட்சிகளில் இருந்து வந்து தம்மோடு செயல்படக்கூடிய சில – பல எம்.பிக்களையும் தமது தரப்புடன் சேர்த்துக் கொண்டு, மொட்டுக் கட்சியின் அரசை விஸ்தரித்து, ஸ்திரமாக்கி, முன்னெடுத்துச் செல்வது தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னாள் கிடக்கும் ஒரே தெரிவு.

அதைச் செய்யும்போது மொட்டு கட்சிக்காரர்களின் பதவி மோகம், அதனால் ஏற்படும் போட்டோ போட்டிகள், குழப்பங்களை போன்றவற்றை எதிர்கொள்ள வேண்டிய கஷ்டம் – நெருக்கடி – ரணிலுக்கு நிச்சயம் இருக்கும்.

அதை அவர் எப்படித் தாண்டப் போகின்றார் என்பதுதான் அடுத்த வாரத்தில் கட்டவிழப் போகும் அரசியலாக இருக்கும்.

# சிமெந்து மற்றும் இரும்பு போன்றவற்றின் விலை தொடர்பாக எதிர்வரும் வாரங்களில் தீர்மானம்

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு



கைத்தொழில் துறைக்குத் தேவையான சிமெந்து, இரும்பு போன்ற மூலப்பொருள்களின் விலை தொடர்பில் நிலவும் பிரச்சினையைத் தீர்க்க எதிர்வரும் வாரத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட உணவுப் பாதுகாப்புக் குழுவின் இரண்டாவது கூட்டம் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நுகர்வோருக்கு குறைந்த விலையில் பொருள்களை வழங்குவது மிகவும் முக்கியம் என்றும் நாட்டில் உற்பத்தியை உயர்த்தி தன்னிறைவு நிலையை உருவாக்கி உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை வரலாற்றில் இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை அரிசி தட்டுப்பாடு நிலவுவதாகவும் உணவு இருப்பு வைத்து நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 'ஹோப் கேட்வே' என்ற விசேட நுழைவாயில் திறப்பு

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான பிரத்தியேக நுழைவாயில் திறக்கப்பட்டுள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார நேற்று (வியாழக்கிழமை) தெரிவித்துள்ளார்.

'ஹோப் கேட்வே' என்று பெயரிடப்பட்ட இந்த விசேட நுழைவாயில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தனிப்பட்ட உதவிகளை வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ளதோடு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகளால் எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் மீது பௌத்த பிக்குகள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு



குருந்தூர்மலை பௌத்த வழிபாடுகளுக்கு, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இடையூறாக இருக்கிறார் என பிக்குகள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை மேற்கொண்டுள்ளனர்.

பௌத்த பிக்குகள் இது தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.

அதற்கமைய, பலதடவைகள் தாம் குருந்தூர்மலையில் பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கு எடுத்த முயற்சிக்கு ரவிகரன் இடையூறாக இருக்கின்றார் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனை தொலைபேசி மூலம் முல்லைத்தீவு பொலிஸார் தொடர்பு கொண்டு; அவரை விசாரணைக்குவருமாறு அழைப்புவிடுத்துள்ளனர் எனவும் தெரியவருகிறது.

# தனிநாயகம் அடிகளாரின் நினைவு வவுனியாவில் நேற்று அனுஷ்டிப்பு!



தமிழ் மொழியை உலக அரங்கில் ஏற்றிவைத்த தமிழ்த்தாயின் தன்னிகரில்லாத் தலை மகனாம் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாருடைய 42 ஆவது வருட நினைவு தினம் வவுனியாவில் நகர மத்தியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று (வியாழக்கிழமை) காலை நகர சபையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம் பெற்றிருந்தது.

இதன்போது தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாருடைய திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூபி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், தமிழ் அருவி சிவகுமாரனால் சிறப்புரையும் மேற்கொள்ளப்பட்டது.

நகரசபை உபதலைவர் குமாரசாமி, நகரசபை உறுப்பினர்களான சந்திர குலசிங்கம், மாவட்ட சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் கென்னடி, தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் மற்றும் சமூக ஆர்வலர்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இந்தியக் கர்ப்பிணியின் மரணத்தால் போர்த்துகல் அமைச்சர் இராஜினாமா




போர்த்துக்கல் நாட்டில் நோயாளியான கர்ப்பிணியின் மரணத்துக்கு நிர்வாக ரீதியாகப் பொறுப்பேற்று அந்த நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் மார்ட்டா டெமிடோ பதவி விலகினார்.

அந்த நாட்டில் சுற்றுலா வந்திருந்த இந்தியாவைச் சேர்ந்த கர்ப்பிணி பெண்ணுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது. உடனடியாக லிஸ்பனில் உள்ள சான்டா மரியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு குழந்தை பிறந்துள்ளது. ஆனால், குறை மாதத்தில் பிறந்ததால் அந்த குழந்தைக்கு சிகிச்சை அளிப்பதற்கான தீவிர சிகிச்சை பிரிவில் படுக்கை வசதிகள் காலியாக இல்லை. எனவே, அங்கிருந்து வேறு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல பரிந்துரை செய்துள்ளனர். இதையடுத்து தாயையும் குழந்தையையும், சாவ் பிரான்சிஸ்கோ சேவியர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். செல்லும் வழியில் தாயின் உடல்நிலை மோசமடைந்துள்ளது. வாகனத்திலேயே அவரை மயக்க நிலையில் இருந்து மீட்பதற்கு தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் சாவ் பிரான்சிஸ்கோ சேவியர் மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

முறையான மருத்துவ சேவை வழங்காமல் அலட்சியமாக இருந்ததே கர்ப்பிணி மரணத்திற்கு காரணம் என குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து நிர்வாக ரீதியாக நடந்த தவறுக்கு பொறுப்பேற்று நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் மார்ட்டா டெமிடோ பதவி விலகினார். அவரது ராஜினாமா கடிதத்தை பிரதமர் ஏற்றுக்கொண்டார் எனத் தகவல் வெளியாகி உள்ளது. எனினும், புதிய அமைச்சர் நியமிக்கப்படும் வரை, மார்ட்டா டெமிடோ பதவியில் நீடிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய சுகாதாரத்துறை மந்திரியை தேர்ந்து எடுப்பதற்காக வரும் 15 ஆம் திகதி அமைச்சர்கள் குழு கூட்டம் நடைபெறுகிறது. இதேபோல், சுகாதாரத் துறையில் இருந்து செயலாளர்கள் அன்டோனியோ லசெர்டா சேல்ஸ் மற்றும் மரியா டி பாத்திமா பொன்சேகா ஆகியோரும் பதவி விலகி உள்ளனர்.

## இங்கிலாந்து பிரதமர் தெரிவுக்கான உள்கட்சி வாக்களிப்ப இன்று முடிவு

### இந்திய வம்சாவளி தலைவர் ரிஷி சுனக் வெல்வாரா?



லண்டன்,செப்.02

இங்கிலாந்தில் ஆளும் கொன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பதவியை போரிஸ் ஜோன்சன் ராஜினாமாச் செய்தார். புதிய பிரதமராக வரும் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான உள் கட்சித் தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்கிற்கும், அந்த நாட்டின் வெளியுறவு மந்திரி லிஸ்டிரசுக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. அதற்கான வாக்குப் பதிவு இன்று மாலை 5 மணிக்கு முடிகிறது. சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் கொன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்கள் தபாலில் அல்லது இணையவழியில் வாக்கு அளிக்கிறார்கள். இதையொட்டி ரிஷி சுனக், லண்டன் நகரில் வெம்ப்லியில் உள்ள கச்சேரி அரங்கில் நேற்று முன்தினம் தனது கடைசி பிரசார கூட்டத்தில் பெற்றோர் யாஷ்விர், உஷா மற்றும் மனைவி அக்ஷதா மூர்த்தி ஆகியோருடன் தோன்றிப் பேசினார். இன்று முடிகிற பிரதமர் தேர்தலில் வாக்குகள் எண்ணப்பட்டு 5 ஆம் திகதி முடிவு அறிவிக்கப்படும். இந்தத் தேர்தலில் ரிஷி சுனக் வெற்றி பெற்றால் வெள்ளையர் அல்லாத முதல் இங்கிலாந்து பிரதமர் என்ற சிறப்பைப் பெறுவார். இவர் இன்போசிஸ் தகவல்தொழில்நுட்ப நிறுவனர் நாராயணமூர்த்தி, சுதா மூர்த்தி தம்பதியின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது.



## அமெ. அதிருப்தியையும் மீறி இந்தியா ரஷ்யாவுடன் கூட்டு இராணுவப் பயிற்சி

மொஸ்கோ,செப்.02

ரஷ்யாவில் நடைபெறும் கூட்டுப் பயிற்சியில் கூர்க்கா ரைஃபிள்ஸ் படையைச் சேர்ந்த இந்திய இராணுவக் குழுவினர் பங்கேற்றுள்ளனர்.

'வோஸ்டாக் - 2022' எனப்படும் பல்முனை இராணுவ உக்தி மற்றும் செயல்திறன் பயிற்சி, ரஷ்யாவின் கிழக்குஈராணுவ மாவட்ட செர்ஜியேவ்ஸ்கி பயிற்சி மைதானத்தில் நேற்று தொடங்கியுள்ளது. இந்த பயிற்சி முகாம் வரும் 7 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இந்த இராணுவப் பயிற்சியில் கூர்க்கா ரைஃபிள்ஸ் படையைச் சேர்ந்த இந்திய இராணுவக் குழுவினர் பங்கேற்றுள்ளனர். 7 நாட்களில் கூட்டுகளப்பயிற்சிகள், போர் விவாதங்கள் மற்றும் வீர, தீர பயிற்சிகளில் இந்திய இராணுவக் குழுவினர் ஈடுபடுகின்றனர். இந்த பயிற்சி பிற இராணுவக் குழுக்கள், பார்வையாளர்களிடையே தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. இராணுவச் செயல்முறைகளை நடைமுறைப்படுத்துதல், புதிய தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதற்கான நடைமுறைகள் உள்ளிட்டவை குறித்து பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

அதே சமயம் ரஷ்யாவுடன் இணைந்து இந்திய ராணுவம் கூட்டுப் பயிற்சி மேற்கொள்வது குறித்து அமெரிக்கா அதிருப்தி தெரிவித்துள்ளது. இது குறித்து வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கரின் ஜீன் பியர் கூறுகையில், உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா மிருகத்தனமான போரை நடத்தும் அதே வேளையில், ரஷ்யாவுடன் எந்த நாடும் பயிற்சி மேற்கொள்வது குறித்து அமெரிக்கா கவலைகொள்கிறது என்று தெரிவித்துள்ளார்.

## உக்ரைன் - ரஷ்யா யுத்தத்தினால் கதிர்வீச்சு வெளியேறும் அபாயம்

### பிரதேச மக்களுக்கு நெருக்கடி காலப் பயிற்சி

உக்ரைன் - ரஷ்யா இடையிலான தாக்குதலால் உக்ரைனின் ஜப்போரிஜியா அணுமின் நிலையத்திலிருந்து கதிர்வீச்சு வெளியேறும் அபாயம் உள்ளது. ஒருவேளை அங்கு கதிர்வீச்சு வெளிப்பட்டால் அதில் இருந்து தப்பிக்கத் தேவையான பயிற்சிகள் அப்பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையமான ஜப்போரிஜியா அணுமின் நிலையத்தில் ரஷ்யாவும் உக்ரைனும் மாறி மாறி தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந் நிலையில் எந் நேரமும் அங்கு ஆபத்து நிகழலாம் என்ற பதற்றம் நிலவி வரும் நிலையில், செர்னோபில் பேரழிவைப்போல் மீண்டும் ஓர் அசம்பாவிதம் நிகழ்ந்து விடுமோ என்ற அச்சம் மேலோங்கியுள்ளது.

உக்ரைனின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த ஜப்போரிஜியா அணுமின் நிலையத்தில் இன்று ஐ.நா. ஆய்வாளர்கள் பார்வையிட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.



# அ.தி.மு.க. தலைமை சர்ச்சையில் எடப்பாடிக்கு சாதகமாகத் தீர்ப்பு!

## ஓ.பன்னீர்ச்செல்வம் தரப்புக்குப் பின்னடைவு



எடப்பாடி பழனிசாமி நடத்திய அ.தி.மு.கவின் பொதுக்குழு கூட்டம் செல்லாது என்ற தனி நீதிபதி வழங்கிய தீர்ப்பை சென்னை ஐகோர்ட்டு ரத்துச் செய்துள்ளது. அந்த உத்தரவு இன்று வழங்கப் பட்டுள்ளது.

சென்னை அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் கடந்த ஜூலை மாதம் 11 ஆம் திகதி சென்னை வானகரத்தில் நடந்தது. இந்த பொதுக்குழு கூட்டத்தை செல்லாது என்று அறிவிக்கக்கோரி ஓ.பன்னீர்செல்வம், அ.தி.மு.க பொதுக்குழு உறுப்பினர் வைரமுத்து ஆகியோர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன், பொதுக்குழு செல்லாது, ஜூன் ஆம் திகதிக்கு முன்பு இருந்த நிலையே தொடரவேண்டும் என்று தீர்ப்பளித்தார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி சென்னை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்தார். இந்த மேல்முறையீட்டு வழக்கை நீதிபதிகள் எம்.துரைசாமி, சுந்தர் மோகன் ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்ச் விசாரித்தது. எடப்பாடி பழனிசாமி தரப்பில், தனி நீதிபதியின் தீர்ப்பில் பல்வேறு தவறுகள் இருப்பதாக சுட்டிக்காட்டினர். கட்சியினர் ஒற்றை தலைமை வேண்டும் எனக் கோரிக்கை வைத்ததாக கூறியதற்கு எந்த புள்ளி விவரங்களும் இல்லை எனவும், ஒன்றரை கோடி உறுப்பினர்களின் எண்ணத்தை 2500 பொதுக்குழு உறுப்பினர்கள் பிரதிபலித்தார்களா என தனி நீதிபதி தீர்ப்பில் கூறியுள்ளது யூகத்தின் அடிப்படையிலானது எனவும் குறிப்பிட்டனர்.

தனது உரிமை பாதிக்கப்பட்டதால் தான் பன்னீர்செல்வம் வழக்கு தொடர்ந்திருக்கிறாரே தவிர, 1.50 கோடி உறுப்பினர்களின் உரிமைக்காக அல்ல எனவும் சுட்டிக்காட்டினர். பன்னீர்செல்வம் தரப்பில், அடிப்படை உறுப்பினர்களை விட பொதுக்குழு உறுப்பினர்களே மேலானவர்கள் என்ற எடப்பாடி பழனிச்சாமி தரப்பு வாதத்தை ஏற்க முடியாது என்றும், கட்சி விதிகளின்படி ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் மட்டுமேபொதுக்குழுவை கூட்ட முடியும் என்பதால் ஜூலை 11 கூட்டத்துக்கு அனுப்பிய நோட்டீஸ் செல்லாதது எனவும் வாதிட்டனர்.

அனைத்துத் தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் கடந்த 25 ஆம் திகதி வழக்கின் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் நீதிபதிகள் ஒத்திவைத்திருந்தனர். இன்று இந்த வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்டது.


அதில் எடப்பாடி பழனிசாமி ஜூலை 11 கூட்டிய பொதுக்குழு செல்லும் என்றும் தனி நீதிபதியின் உத்தரவு ரத்து என்று சென்னை ஐகோர்ட் தீரப்பளித்துள்ளது.

தீர்ப்பு குறித்து எடப்பாடி பழனிசாமி தரப்பு வழக்கறிஞர் இன்பதுரை கூறியதாவது:-

பொதுக்குழு உறுப்பினர்களின் ஒப்புதலோடு அதிமுக சட்ட விதிகளின் படி மட்டுமே இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி ப்ழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே ஜூலை 11 இல் நடந்த பொதுக்குழு செல்லும். ஒற்றை தலைமையின் நோக்கம் மற்றும் முன்னேற்பாடுகள் அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளது. அதிமுக சட்ட விதிகளின் படி பொதுக்குழு கூட்டப்பட்டுள்ளது என்ற வாதம் ஏற்கப்பட்டது என கூறினார். தனி நீதிபதி உத்தரவு ரத்தானதால் இடைக்கால பொதுச்செயலாளர் பதவி செல்லும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் நீக்கப்படுகின்றன. இதனால் ஓ பன்னீர்செல்வத்தை இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி நீக்கியது செல்லும். எடப்பாடி பழனிசாமி உத்தரவின் பெயரில் பொருளாளராக திண்டுக்கல் சீனிவாசன் நியமிக்கப்பட்டது செல்லும். ஓபிஎஸ் ஆதரவாளர்கள் எல்லோரும் நீக்கப்பட்டது செல்லும். பொதுக்குழு செல்லும் என்று நீதிமன்றம் அறிவித்ததால், தேர்தல் ஆணையம் இதை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. - என்றார்.

இதனால் எடப்பாடி தரப்பினர் இந்த தீர்ப்பை கொண்டாடி வருகின்றனர்.

# மாணவிகள் மீது பலாத்காரமாம் கர்நாடகத்தில் மடாதிபதி கைது



சித்ரதுர்கா,செப்.02

கர்நாடாகாவில் மாணவிகளுக்கு எதிரான பாலியல் வழக்கில் சித்ரதுர்கா மடாதிபதி சிவமூர்த்தி முருகா சரணருவை நேற்றிரவு பொலிஸார் கைது செய்தனர். சித்ரதுர்காவில் உள்ள முருக மடத்தின் மடாதிபதியாக இருந்து வருபவர் சிவமூர்த்தி முருகா சரணரு. இவர் மீது மடத்தின் பள்ளியில் தங்கி படித்த 2 மாணவிகள் பாலியல் பலாத்கார புகார் அளித்தனர். அந்த புகாரின்பேரில் மடாதிபதி சிவமூர்த்தி முருகா சரணரு உள்பட 5 பேர் மீது கடந்த 26 ஆம் திகதி சித்ரதுர்கா பொலிஸார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய் தனர்.

இந்த வழக்குத் தொடர்பாக மடாதிபதி சிவமூர்த்தி முருகா சரணரு, சித்ரதுர்கா பொலிஸார் முன்பு ஆஜராகி விளக்கம் அளித்து இருந்தார். மேலும் பாதிக்கப்பட்ட இரு மாணவிகளும், சித்ரதுர்கா மாவட்ட இரண்டாவது கூடுதல் மற்றும் செசன்ஸ் நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலமும் அளித்து இருந்தனர்.

**முன்பிணை கேட்டு மனு**

இதற்கிடையே கைது நடவடிக்கையில் இருந்து தப்பிக்கும் வகையில் மடாதிபதி சிவமூர்த்தி முருகா சரணரு சார்பில் சித்ரதுர்கா நீதிமன்றத்தில் முன்பிணை கேட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு மீது நேற்று விசாரணை நடந்தது. அப்போது இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி முன்ஜாமீன் மனு மீதான விசாரணையை இன்று (வெள்ளிக் கிழமை) ஒத்திவைத்தார்.

இதற்கிடையே மடத்திற்கு சொந்தமான விடுதியில் தங்கி படித்த நூறுக்கும் மேற்பட்ட மாணவிகள் வேறு விடுதிகளுக்கு மாற்றப்பட்டு உள்ளனர். இதேசமயம், மடாதிபதி மீதான பாலியல் புகார் குறித்து தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் தானாகவே முன்வந்து வழக்குப்பதிவு செய்து உள்ளது.

மேலும் பாலியல் புகார் பற்றி கடந்த ஒரு வார மாக என்ன விசாரணை நடந்தது என்பது குறித்து விளக்கம் அளிக்கும்படி சித்ரதுர்கா மாவட்ட பொலிஸ் சுப்பிரண்டன் பரசுராமுக்கு, தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. இதுபோல மாநில மகளிர் ஆணையமும் பாலியல் புகார் குறித்து நடத்தப்பட்ட விசாரணை பற்றி தகவலை வழங்கும்படி பொலிஸ் சுப்பிரண்டன் பரசுராமுக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளது. இதற்கிடையே இந்த வழக்கில் தொடர்புடைய மடத்தின் அதிகாரி பசவராஜன், அவரது மனைவி சவுபாக்யா ஆகியோர் பிணை கேட்டு சித்ரதுர்கா செசன்ஸ் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இருந்தனர். அந்த மனுக்களை நேற்று விசாரித்த கோர்ட்டு பசவராஜன், சவுபாக்யா ஆகிய 2 பேருக்கும் பிணை வழங்கி உள்ளது.

**மடாதிபதி அதிரடி கைது**

இந்த நிலையில் நேற்று இரவு 10 மணி அளவில் சித்ரதுர்கா பொலிஸார், முருக மடத்திற்கு சென்று, மடாதிபதி சிவமூர்த்தி முருகா சரணருவை கைது செய்தனர். பின்னர் அவரைக் காரில் ஏற்றி பொலிஸார் அழைத்துச் சென்றனர். அந்த சமயத்தில் அப்பகுதியில் பலத்த மழை பெய்தது. கொட்டு மழையில் மடாதிபதி கைது செய்யும் நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு இருந்தனர்.

**பொலிஸார் குவிப்பு**

மடாதிபதி கைது நடவடிக்கையை தொடர்ந்து அசம்பாவித சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க மடம் மற்றும் சித்ரதுர்கா நகர் முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டு உள்ளனர். மடாதிபதி கைது செய்யப்பட்ட தகவலை அறிந்து பக்தர்கள் மடத்திற்கு வரத்தொடங்கினர். ஆனால் அங்கு பக்தர்களை பொலிஸார் அனுமதிக்காமல் துரத்தினர். கைதான மடாதிபதியை பொலிஸார் மருத் துவ பரிசோதனைக்காக சித்ரதுர்கா அரசு ஆஸ்பத்திரிக்கு அழைத்து செல்கின்றனர் எனத் தகவல் வந்தது. ஆனால் பொலிஸார் அங்கு அழைத்து செல்லவில்லை அவரை இரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

மடாதிபதியிடம் சித்ரதுர்கா வட்ட இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ண நாயக், முலகால்மூரு இன்ஸ் பெக்டர் சதீஷ் ஆகியோர் தலைமையிலான பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் எனக் கூறப்படுகிறது. இந்நிலையில் மாணவிகளுக்கு எதிரான பாலியல் வழக்கு தொடர்பாக சித்ரதுர்கா மடாதிபதிக்கு 14 நாள் நீதிமன்ற காவல் விதிக்கப்பட் டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது பாலியல் புகாரின் பேரில் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து 6 நாள்கள் ஆன நிலையில் நேற்று இரவு மடாதிபதி கைது செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது.

## தேசத்துக்கு எதிரான குற்றச்செயல்கள் வழக்குகளின்படி தமிழகம் 2 ஆம் இடம்

மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய குற்ற ஆவணக் காப்பகம் 'இந்தியாவில் குற்றங்கள்-2021' என்ற புள்ளிவிவர அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டு, தேசத்துக்கு எதிரான குற்றச்செயல்களுக்காக 5 ஆயிரத்து 164 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அதாவது, நாள் ஒன்றுக்கு சராசரியாக 14 வழக்குகள் பதிவாகி உள்ளன.

இது, கடந்த 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விட குறைவாகும். தேசத்துக்கு எதிரான குற்ற வழக்குகளில், தேசத்துரோக வழக்குகள், அரசாங்க இரகசிய சட்ட வழக்குகள், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்ட (உபா) வழக்குகள், பொதுச்சொத்துக்கு சேதம் விளைவித்த வழக்குகள் ஆகியவை அடங்கும். தேசத்துக்கு எதிரான குற்ற வழக்குகளில் உத்தரபிரதேசம் முத லிடம் பிடித்துள்ளது. அங்கு 1,862 வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. 654 வழக்குகளுடன் தமிழ்நாடு 2ம் இடம் பிடித்துள் ளது. அசாம், காஷ்மீர், மேற்கு வங்காளம் ஆகியவை அடுத்தடுத்த இடங்களை பிடித்துள்ளன.

தேசத்துக்கு எதிரான குற்ற வழக்குகளில், பொதுச்சொத்துக்கு சேதம் விளைவித்த வழக்குகள்தான் அதிகம். அத்தகைய 4 ஆயிரத்து 69 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தேசத்துரோக வழக்குகள் 76 உம், 'உபா' சட்ட வழக்குகள் 814 உம், அரசாங்க இரகசிய சட்ட வழக்குகள் 55 உம் பதிவாகி உள்ளன. அதிகமான தேசத்துரோக வழக்குகள் ஆந்திராவிலும் (29 வழக்குகள்), அதிகமான 'உபா' சட்ட வழக்குகள் மணிப்பூரிலும் (157) பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதுபோக, முந்தைய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட 8 ஆயிரத்து 600 வழக்குகளில் விசாரணை நிலுவையில் உள்ளது.

# மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பிரச்சினைகள் குறித்து கலந்தாய்வு





(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாவட்ட விவசாய அபிவிருத்தி குழுக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது விவசாயிகளின் கடன் வழங்கல், பெரும்போக வேளாண்மை செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக பெரும்போக பயிர்ச்செய்கையை எதிர் வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி விவசாயிகள் ஆரம்பிக்க உள்ளனர் எனவும், அதற்கான உள்ளீடுகள் – கிருமிநாசினிகள், களை நாசினிகள், உரம் மற்றும் பிரதானமாக வயலை உழுவதற்கு இயந்திரத்துக்கு தேவையான எரிபொருள்கள் போன்றன பெற்றுத் தரப்பட வேண்டும் என விவசாயிகள் இக்கூட்டத்தில் தெரிவித்தனர்.

கடந்த பெரும்போகம் மற்றும் சிறுபோக வேளாண் மையில் பாரிய நட்டத்தையும் பின்னடைவையும் கொண்டிருக்கின்ற நிலையில், இந்த பெரும் போகத்தில் தங்களுக்கு தேவையான உள்ளீடுகளை முன்கூட்டியே வழங்கவேண்டும், அவ்வாறு வழங்காவிட்டால், இம்முறை பெரும்போக வேளாண்மையைக் கைவிடுவோம் என விவசாயிகள் தெரிவித்தனர். தங்களது கோரிக்கைகள. அவர்கள் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றின் மூலம் கையளித்தனர்.

தொடர்ந்து எரிபொருள் விநியோகம் மற்றும் நீர்ப்பாசன விநியோகம் தொடர்பாகவும் கலந்து ரையாடப்பட்டது. அத்தோடு நெல்லிற்கான நிர்ணய விலையை சரியான முறையில் கொண்டுவர வேண்டும் எனவும், விவசாயிகளால் கோரிக்கை முன்வைக்கப் பட்டது. யானையினால் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சி னைகளையும், நட்டங்களையும் தங்களுக்கு சரியான முறையில் சீர் செய்து தர வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தனர். இக்கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், விவசாய திணைக்கள பிரதிப் பணிப் பாளர், நீர்ப்பாசனத்துறைப் பணிப்பாளர், மட்டக்களப்பு உதவி பொலிஸ் மா அதிபர், பிரதேச செயலாளர்கள், கமநல சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய சங்கத் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## கல்முனை மாநகர சபை எல்லைக்குள் காட்டு யானைகள் அடிக்கடி தொல்லை

சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்முனை பிரதேச மக்களுக்காக கல்முனை மாநகர சபை எல்லைக்குள் அமைக்கப்பட்ட கிறீன்ட் பீல்ட் தொடர் மாடி மக்கள் குடியிருப்பு பகுதியில் நேற்று வியாழன் அதிகாலை 2.30 மணியளவில் காட்டு யானைகள் உள் நுழைந்து அங்குள்ள கல்முனை சமூர்த்தி வங்கி மற்றும் கல்முனை றோயல் வித்தியாலத்தின் சுற்றுபுற வேலிகளின் ஒரு பகுதியை சேதப்படுத்தி உள்ளன எனத் தெரியவருகிறது.

அயலிலுள்ள வயல் வெளிகளில் கூட்டமாக சஞ்சரிக்கு இந்தக் காட்டு யானைகள் இரவு வேளைகளில் பொது மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் ஊடுருவுகின்றன. இதனால் மிகவும் அச்ச நிலையில் தாங்கள் வசித்து வருகின்றனர் எனப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

கல்முனை மாநகர சபையினால் சேமிக்கப்படும் திண்மக் கழிவுகள் கல்முனை கீறின் பில்ட் குடியிருப்பு பகுதியை அண்மித்த வயல் வெளிப் பகுதியில் மொத்தமாகக் கொட்டப்பட்டு, சேமிக் கப்பட்டு, அகற்றல் நடவடிக்கை இடம்பெற்று வரும் நிலையில், இந்தத் திண்மக்கழிவை உண்பதற்காகக் காட்டு யானைகள் வருகை தருகின்றன எனக் குடியிருப்பாளர்கள் மேலும் தெரி விக்கின்றனர்.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் யானைகள் புகுவதை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறு பொது மக்கள் உரிய அதிகாரி கள் மற்றும் பிரதேச அரசியல்வாதிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.







## கல்முனையில் யானைத் தொல்லையை சமாளிக்க மின்னொளி வசதி அதிகரிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மற்றும் நற்பிட்டிமுனை பிரதேசங் களில் இரவு நேரங்களில் அதிகரித்துள்ள யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, மின்னொளி வசதிகளை அதிகரிப்ப தற்கு கல்முனை மாநகர சபை தீர்மானித்துள்ளது. கல்முனை மாநகர சபையின் 53ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு கடந்த செவ்வாய் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மாநகர சபை உறுப்பினர் சீ.எம்..முபீத் விடுத்த கோரிக்கையையடுத்து, இது தொடர்பில் தீர் மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவர் இப்பிரச்சினையை பிரஸ்தாபித்து உரையாற்றுகையில் –

இரவு நேரங்களில் நற்பிட்டிமுனை பிரதேசத்தி னுள் காட்டு யானைகள் பட்டி பட்டியாக திரண்டு வந்து, விவசாய நிலங்களையும் பொது மக்க ளின் உடைமைகளையும் சேதப்படுத்தி வருகின் றன. ஊருக்குள் அத்துமீறி நுழையும் யானைக ளினால் மக்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படு கின்றது. ஆகையினால், யானைகளின் தொல் லைகளை கட்டுப்படுத்துவதற்காக இப்பிரதேசத் தில் விசேடமாக மின்னொளி வசதிகள் அதி கரிக்கப்பட வேண்டும்.

இதற்காக வெளிச்சம் கூடிய மின் குமிழ்கள் அவசரமாக பொருத்தப்பட வேண்டும். அத்துடன் யானைகளை துரத்துவ தற்காக பட்டாசுகளை பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து முதல்வரின் ஆலோசனைக் கமைவாக அந்தப் பிரதேசத்தில் மேலதிக மின் குமிழ்களை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, கல்முனை அஹமட் பஸா ருக்கு பின்னாலுள்ள பகுதியிலும் யானைகள் ஊடுருவுகின்றன எனச் சுட்டிக்காட்டிய மாநகர சபை உறுப்பினர் எம்.சிவலிங்கம், இப்பகுதி யையும் வெளிச்சமூட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். இதையடுத்து மேற்படி நடவடிக்கையின்போது இப்பகுதியையும் உள்வாங்குவதெனத் தீர்மா னிக்கப்பட்டது.

## ஓட்டமாவடியில் இளம் தாய் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

மின்சாரம் தாக்கி இளம் தாயொருவர் மரணித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித் தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி மூன்றாம் வட்டாரம் மஸ்ஜிதுல் ஹைர் பள்ளிவாசல் வீதி யிலுள்ள வீடொன்றிலே இந்த மரணச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

அந்த வீட்டுப் பெண்மணி குளிர்சாதனப்பெட்டியில் இருந்த பொருள்களை எடுக்க திறந்த போது குளிர்சாதனப் பெட்டியில் மின் ஒழுக்கு ஏற்பட் டிருந்த காரணமாக மின்சாரம் தாக்கியதில் மரணமடைந்துள்ள தாக பொலிஸாரின் விசார ணைகளின் போது தெரியவந் துள்ளது. மரணமடைந்த 35 வயதுடைய இரண்டு பிள்ளைக ளின் தாயான அபூபக்கர் பஸ் மியா என்பவரின் உடல் பிரேதே பரிசோதனைக்காக வாழைச் சேனை ஆதார வைத்திய சாலையில்வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்று வலியுறுத்தி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!





கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்னும் தொனிப்பொருளில் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுசரணையோடு நீதிக்கான மக்கள் அமைப்பால் ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நிரந்தரமான அரசியல் தீர்வை வலுயுறுத்தி இடம்பெற்று வரும் நூறு நாள் செயற்திட்டத்தில் 32 ஆவது நாளான நேற்று (வியாழக்கிழமை) வவுனியா பத்தினியார் மகிழங்குளம் முனியப்பர் ஆலயத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடன் நிறுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கிய பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பு!

நாட்டின் ஆறு மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தீர்மானித்துள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) முதல் நாளை சனிக்கிழமை வரை இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்தறை, கண்டி, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய பகுதிகளிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இது 60 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை உள்ளடக்கியதாக நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை அழித்து, சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளுமாறு, சுகாதாரத் துறையினர் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

## இலங்கைக்கு நாணயநிதியம் கடனுதவி இலங்கைக்கான கனடா தூதர் வரவேற்பு!

இலங்கைக்கும் சர்வதேச நாணயநிதியத்துக்கும் இடையில் கடனுதவி தொடர்பாக இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதை இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்கினன் வரவேற்றுள்ளார். நேற்று (வியாழக்கிழமை) அவர் வெளியிட்ட ருவிட்டர் பதிவிலே இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையை வளர்ச்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய செழிப்பை நோக்கிய பாதையில் கொண்டு செல்ல உதவும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# சமூக நிறுவனங்களின் திறன் விருத்தியை அதிகரிக்கும் செயலமர்வு கிண்ணியாவில்







(ஹஸ்பர் ஏ கலீம்)

அமெரிக்கத் தூதரகத்தின் நிதியுதவியுடன் 'சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசன்' கிண்ணியா அமைப்பினரின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 சிவில் சமூக அமைப்புகளின் திறன் விருத்தியை மேம்படுத்தும் செயலமர்வொன்று கிண்ணியா வின் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

PEACE எனும் இப்புதிய செயற்திட்டம் சமூகத்தின் ஒன்றிணைக்கப்பட்ட செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கான மக்களின் ஈடுபாட்டை மேம்படுத்தல் People's Engagement and Action For Civic Empowerment(PEACE) எனும் தலைப்பில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 20 சிவில் சமூக அமைப்புகளை ஜனநாயக மற்றும் அபிவிருத்தி துறையில் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேற்படி நிகழ்ச்சியில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 11 பிரதேச செயலகங்களிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 20 சிவில் சமூக அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் அதன் முக்கிய உறுப்பினர்கள் ஆகியோரின் தலைமையில் சிவில் சமூக நிறுவனங்களின் திறன் விருத்தியை அதிகரிக்கும் நோக்கில் திருகோணமலை சிவில் மன்றம் (Trinco Civic Forum) என்ற அமைப்பொன்று உருவாக்கப்பட்டது.

இதன் போது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பயனாளிகளின் விவரங்களைத் திரட்டல், சிவில் சமூக அமைப்புகளின் திறன் விருத்தியை மேம்படுத்தும் பணியினை ஆரம்பித்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வின் வளவாளராக சுஜீவன் சித்ரவேல் மற்றும் அவரோடு கடமையாற்றும் மதியழகன், நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷிக் அலாப்தீன், கணக்கு உதவியாளர் நிாத் சுபைர் மற்றும் ஊடக அதிகாரி ஆதில் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.09.2022இல் வெளியிடப்பெற்றது.